# முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண். 33/2014

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 25–ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.7–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **லோகநாதன்** | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**முதல் விசாரணை:–**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். 1989 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டம், புதன்சந்தை, காமாட்சி பெரியசாமி கோவிலுக்கு மகாசிவராத்திரிக்கு சாமி கும்பிட வருடா வருடம் செல்வோம். அவ்வாறு நாங்கள் கோவிலுக்கு சென்று விட்டு திரும்பி வரும்போது எங்கள் வாகனத்திற்கு அருகில் பிறந்து ஒரு நாள் ஆன குழந்தை ஒன்று இருந்தது. அந்த குழந்தையை பார்க்க பாவமாகவும், அழுது கொண்டு இருந்தது. என் பங்காளி ராமலிங்கம் மற்றும் தெய்வாணையம்மாள் (2 ம் பிரதிவாதி) ஆகியோர் அந்த குழந்தையை எடுத்துக்கொண்டு செல்லலாம் என்று எங்களை கட்டாயப்படுத்தினார்கள். நாங்கள் யார் குழந்தையென்று தெரியவில்லை வேண்டாம் என்று கூறினோம். ராமலிங்கம் பிடிவாதமாக குழந்தையை வளர்க்கலாம் என்று எடுத்து வந்தார். அங்கு கோவில் பூசாரிகளிடம் அந்த ஆண் குழந்தையை யாராவது கேட்டால் திருப்பி கொடுத்துவிடுகிறோம் என்று எங்கள்

போன் நம்பரையும், முகவரியையும் தெரிவித்து விட்டு வந்தோம். என் பங்காளிகள் அவைரும் இந்த குழந்தை எதற்கு வேண்டாம் என்று சொன்னார்கள். அதற்கு நாங்கள் வளர்த்துக்கொள்கிறோம் என்று ராமலிங்கம் கூறினார்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மேற்சொன்ன குழந்தையை தத்தெடுத்ததற்காக விழா கொண்டாடினார்களா என்றால் இல்லை. இதுவரையிலும் அந்த குழந்தையை தேடி யாரும் போன் செய்யவும் இல்லை தேடிவரவும் இல்லை. 2ம் பிரதிவாதி குழந்தையை யாராவது திருப்பி கேட்டால் கொடுத்துவிடலாம் என்று தான் கூறினார். ராமலிங்கம் பிடிவாதமாக குழந்தையை வளர்க்கலாம் என்று கூறிவந்தார். 2ம் பிரதிவாதிக்கு மருத்துவரீதியாக குழந்தை பிறக்கக்கூடிய அமைப்பு இல்லை என்று மருத்துவர் யாராவது கூறினார்களா என்றால் அப்படி எதுவும் சொல்லவில்லை.

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

வழக்கு பற்றிய விவரங்கள் 2ம் பிரதிவாதி சொல்லவில்லை. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது அதன் அடிப்படையில் வழக்கைப்பற்றி தெரிந்துகொண்டேன். மேற்சொன்ன எங்கள் குலதெய்வ கோவிலுக்கு கொங்கு வேளாளர் சமூதாயத்தை தவிர மற்ற குடிபாட்டுக்காரர்களும் வருவார்கள் என்றால் சரிதான். அந்த கண்டெடுத்த குழந்தை பெயர் காமாட்சி பெரியசாமி என்ற கோகுல் ஆவார். மேற்சொன்ன நபருக்கு பெயர் வைத்தது ராமலிங்கம் மற்றும் 2ம் பிரதிவாதி ஆவார்கள். காமாட்சி பெரியசாமி என்ற கோகுல் என்பவரை பள்ளியில் சேர்க்கும் போது ராமலிங்கம் தான் தகப்பனார் என்று கையொப்பம் செய்து சேர்த்துள்ளார். ராமலிங்கத்தின் குடும்ப அட்டையில் காமாட்சி பெரியசாமி என்ற கோகுலின்

பெயர் மகன் என்று உள்ளது. ராமலிங்கம் இறந்தபிறகு காமாட்சி பெரியசாமி என்ற கோகுலை மகன் என்று வாரிசு சான்றிதழில் உள்ளது என்றால் சரிதான். ராமலிங்கத்தின் குடும்பம் சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் காமாட்சி பெரியசாமி என்ற கோகுல் மகன் என்ற முறையில் தான் உள்ளது என்றால் சரிதான். ராமலிங்கத்தின் உறவுக்காரர்கள் குழந்தையை எடுத்ததால் அவருடன் பேச்சு வார்த்தை இல்லை. உறவினர்களின் எதிர்ப்பையும் மீறி ராமலிங்கம் கோகுலை வளர்த்து வந்தார். ராமலிங்கமும், 2ம் பிரதிவாதியும் காமாட்சி பெரியசாமி என்ற கோகுலை சொந்த மகனாகத்தான் வளர்த்து வந்தார்கள். 2ம் பிரதிவாதிக்கு சாதகமாக இருக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.25 17:55:40 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண். 33/2014**

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 25–ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.8–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **மோகன்ராஜ்** | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**முதல் விசாரணை:–**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் விவசாயம் மற்றும் நிலம் விற்கும் வேலையும் செய்து வருகிறேன். இந்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி நடராஜன் எனக்கு 25 வருடங்களாக பழக்கம். 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து நானும் கூட்டு வியாபாரம் செய்து வந்தேன். பிரபு (பி.வா.சா.6) என்பவர் மூலமாக காமாட்சி பெரியசாமி என்ற கோகுல் நிலம் விற்கிறார் என்று நடராஜனிடம் கூறினார் அந்த விவரத்தை 1ம் பிரதிவாதி நடராஜன் என்னிடம் கூறினார். ஒரு வாரத்திற்கு முன்பாக 1ம் பிரதிவாதி நடராஜன் Guest House ல் கோகுலை அழைத்து வந்து வைத்திருந்தார். நான் நடராஜன் Guest House க்கு சென்ற போது அங்கு பிரபு (பி.வா.சா.6) என்பவர் இருந்தார். நான் செல்லும்போது பிரபு, கோகுல், நடராஜன் மற்றும் 2, 3 பேர் இருந்தார்கள் அவர்கள் மது அருந்தி கொண்டிருந்தார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து மது அருந்தினேன். ஒரு வாரமாக நடராஜன் Guest House ல் தான் கோகுல் இருந்தார். நடராஜன் கிரையம்

பெறுவதற்கு முன்பாக நடராஜன் கோகுலை அவரது Guest House ல் வைத்திருந்தார். கிரைய தேதியன்று 1ம் பிரதிவாதி நடராஜன் என்னை Guest house க்கு வரச்சொன்னார். நான் சென்ற போது காமாட்சி பெரியசாமி என்ற கோகுலும், பிரபும் அங்கு இருந்தார்கள். 1ம் பிரதிவாதி நடராஜன் தான் முன்பாக சென்று கிரைய ஆவணங்களை தயார் செய்வதாக சொல்லி சென்றுவிட்டார். கோகுலை அழைத்து வருவதற்கு முன்பாக அவருக்கு மது கொடுத்துவிட்டு அழைத்து வாருங்கள் என்று 1ம் பிரதிவாதி நடராஜன் என்னிடம் கூறினார். பிரபு என்பவர் காமாட்சி பெரியசாமி என்ற கோகுலுக்கு ஊசி போட்டார். சாட்சி பிறகு தாமாக பின்வருமாறு கூறினார் கோகுலுக்கு வேறொரு பையன் ஊசி போட்டார். நடராஜன் 10.15 மணிக்கு எனக்கு போன் செய்தார். நடராஜன் பிரஜோரா கார் என்னிடம் தான் இருந்தது. ஈஸ்வரன் கோவில் ஒட்டி வடபுறத்தில் உள்ள ரோட்டிற்கு கோகுலை 1ம் பிரதிவாதி அழைத்து வரச்சொன்னார். பிறகு நான், பிரபு, கோகுல் மற்றும் 3 பேர் காரில் சென்றோம். நடராஜன் மேற்கூறிய இடத்தில் இருந்தார். அங்கு 1ம்பிரதிவாதி நடராஜன் 2, 3 பத்திரங்கள் வைத்திருந்தார். அதில் கோகுலிடம் கையொப்பம் பெற்றார்கள். Guest House ல் இருந்து வரும்போதே கோகுல் மது போதையில் தான் இருந்தார். அன்றைய தினமே பிரபுவிடம் (பி.வா.சா.ஆ.6) கோகுல் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார். சாட்சி தானாக பின்வரமாறு கூறினார் கோகுல் பிரபுக்கு எழுதிக்கொடுத்த பொதுஅதிகார பத்திரத்தை ரத்து செய்து கொடுத்தார். பின்னர் பிரபு அவர் வீட்டிற்கு சென்றுவிட்டார். பின்னர் நான், நடராஜன், கோகுல் ஆகியோர் காரில் காத்துக்கொண்டிருந்தோம். அதன்பிறகு 1ம் பிரதிவாதி நடராஜன் ஆவணங்களை பதிவு செய்ய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றார். சார்பதிவாளர் அலுவலகத்தில் கையொப்பம் செய்தாரா என்று எனக்கு தெரியாது. அதற்குமுன்பாக காரில் வைத்து கோகுலிடம் கையொப்பங்கள் பெறப்பட்டது. இரண்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் சென்றார்கள். அதன்பிறகு நடராஜன்,

நான், கோகுல் மற்றும் உடன் இருந்த மற்றும் சிலர் நடராஜன் வீட்டில் கொண்டு விட்டுவிட்டோம். மறுநாள் காலை நடராஜன் எனக்கு போன் செய்து கோகுலை அழைத்துச்சென்று என் தோட்டத்திற்கு கூட்டிச்செல்லும்படி கூறினார். கோகுல் 7, 8 நாட்கள் என் தோட்டத்தில் தான் இருந்தார். அப்போது தினமும் கோகுல் மது அருந்திக்கொண்டிருந்தார். நடராஜன் ஒரு பையனை அழைத்து வருவார். அந்த பையனை வைத்து கோகுலுக்கு ஊசி போடுவார். நான், கோகுல், அனைவரும் தோட்டத்தில் தான் இருந்தோம். நான் என் குடும்பத்துடன் வெளியூருக்கு சென்றுவிட்டேன். கோகுலின் சொந்தக்காரர்கள் தோட்டத்து கதவை உடைத்து கோகுலை அழைத்துச்சென்றுவிட்டார்கள். நான் கோகுலை காணவில்லை என்று அக்கம் பக்கத்தில் விசாரித்தேன். நான் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் கோகுலை காணவில்லை என்று ஒரு புகார் கொடுத்தேன். கோகுல் தரப்பினரும் வேலாயுதம்பாளையத்தில் கோகுலை காணவில்லை என புகார் கொடுத்திருந்தனர். அதன்பிறகு கோகுலை காவல்துறையினர் காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தனர். அங்கு கோகுாலை காவல்துறையினர் விசாரித்தனர். அப்போது கோகுல் என்னுடன் வருவதாக (கோகுல் என்னை மாமா என்று கூறுவார். மாமாவிடம் செல்வதாக கூறினார்) சொன்னார். அன்று இரவு கோகுல் எங்கள் வீட்டிற்கு வந்தார். எங்கள் வீட்டில் உள்ளவர்கள் காவல்துறையினரால் பிரச்சனை வருகிறது என்று சொன்னதால் கோகுலை நான் 1ம் பிரதிவாதி நடராஜன் வீட்டிலேயே விட்டுவிட்டேன். நடராஜன் மேற்சொன்ன நிகழ்வுகளின் போது 1 லட்ச ரூபாய் பணம் என்னிடம் கொடுத்தார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

**(1ம் பிரதிவாதி தரப்பில் சாட்சி 2ம் பிரதிவாதிக்கு எதிராக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய வாதிக்கு சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது என்று கூறி இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 137 –ன் படி அனுமதிக்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்தார். 1ம் பிரதிவாதிக்கு குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்படுவதால் வாதியின் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. மேலும் வாதிக்கு பிரதிவாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனைத்து உரிமைகளும் உள்ளது. )**

நீங்களும் 1ம் பிரதிவாதியும் பல வருடங்களாக நிலம் வாங்கி விற்பதில் பல பிரச்சனைகள் வந்தள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு உங்களை போல் பல நபர்கள் உதவியாக உள்ளார்கள் என்றால் சரிதான். நிலம் அபகரித்தல் சம்மந்தமாகவும், பானுமதியை கொலை செய்ய முயற்சிக்காவும் உங்கள் மீதும் 1ம் பிரதிவாதி மீதும் வழக்கு உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நடராஜன் நிலம் வாங்கும் அடிதடி பிரச்சனைக்காக உங்களுக்கு சன்மானம் கொடுப்பார் என்றால் சரிதான். உங்கள் மீதும், 1ம் பிரதிவாதி நடராஜன் மீதும் வெவ்வேறு நிலம் அபகரிப்பு சம்மந்தமாக நிறைய வழக்குகள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல இந்த வழக்கும் மற்றொரு வழக்கான பானுமதி சம்மந்தமான வழக்கு மட்டும் தான் உள்ளது. பானுமதி வழக்கு சம்மந்தமாக உரிமையியல் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது என்றால் வழக்கு இருப்பதாக தெரியும் என்ன வழக்கு என்று தெரியாது. கோகுலை நிலத்தை அபகறிக்க வேண்டி தான் 1ம் பிரதிவாதி நடராஜன் உங்கள் உதவியை நாடியுள்ளார் என்று சொன்னால் சரிதான். கோகுல் அவருடைய நிலத்தை விற்பது சம்மந்தமாக உங்களிடம் நேரடியாக சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 பிரபுவை எனக்கு 18 வருடங்களாக தெரியும். பிரபுவும் வாதி கோகுலும் சிறுவயதிலிருந்து நண்பர்கள்

என்றால் சரிதான். வாதி கோகுலின் குடும்ப விவரங்கள் குறித்து அனைத்தும் தனக்கு தெரியும் என்று 1ம் பிரதிவாதி நடராஜன் உங்களிடம் ஏதாவது கூறியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். கோகுலின் சொத்தை எழுதி வாங்க வேண்டி கோகுலின் சிறு வயது நண்பரான பி.வா.சா.ஆ.6 பிரபுவை பயன்படுத்தி 1ம் பிரதிவாதி நடராஜன் திட்டமிட்டு செயல்பட்டுள்ளார் என்றால் சரிதான். கோகுல் பிரபுவிற்கு பொது அதிகார பத்திரம் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியும். கோகுல் பிரபுவிற்கு பொது அதிகார பத்திரம் எழுதி வைத்த விவரம் பற்றி 1ம் பிரதிவாதி நடராஜன் உங்களிடம் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். Guest House–ல் கோகுல் இருக்கும்போது மது போதையிலும், ஊசி போட்டும் இருந்தார் கோகுலை அடைத்து வைக்க வில்லை. கோகுலுடன் 2, 3 பேர் இருந்தது கோகுலின் காவலுக்காகத்தான் இருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல அனைவரும் ஒன்றாக மது அருந்தியிருந்தார்கள். கோகுல் Guest House–ல் இருந்தபோது கிரையம் கொடுப்பது பற்றி எந்த விவரமும் பேசவில்லை. வாதி கோகுல் கிரையம் சம்மந்தமாக என்னிடம் எந்த விவாதமும் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி கோகுலின் சொத்தை எழுதிவாங்க வேண்டும் என்று தான் கூறினார். 2ம் பிரதிவாதி தெய்வாணை இது குறித்து தமிழ் நாளிதழில் ஒரு விளம்பரம் கொடுத்தார் அது குறித்து உங்களுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தெரியும் என்றால் தெரியும். அந்த பொது அறிவிப்பு வழக்கறிஞர் பன்னீர்செல்வம் மூலம் கொடுத்தார்கள் என்றால் கொடுத்தார்கள் வழக்கறிஞர் பெயர் தெரியாது. இதற்கு மறுப்பு அறிவிப்பு 1ம் பிரதிவாதி நடராஜன் கொடுத்தார். அந்த மறுப்பு அறிவிப்பை கோகுல் பெயரில்தான் 1ம் பிரதிவாதி நடராஜன் கொடுத்தார். அந்த மறுப்பு அறிவிப்பை 1ம் பிரதிவாதி நடராஜன் வழக்கறிஞரான கே.வேலுசாமிதான் கொடுத்தார் என்றால் சரிதான். மறுப்பி அறிவிப்பு சம்மந்தமாக 1ம் பிரதிவாதி என்னிடம் விவாதம் செய்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி இந்த தொகைக்கு சொத்தை வாங்கியுள்ளேன் என்று என்னிடம் கூறவில்லை. 2

சார்பதிவாளர் அலுவலகத்திலும் கோகுல் சென்ற போது அவருடன் யாரும் இல்லை. 2 கோடி ரூபாய் 1ம் பிரதிவாதி வாதியிடம் கொடுத்ததை கிரையம் செய்யும்போது நீங்கள் பார்த்தீர்களா என்றால் இல்லை. கிரையத்தின் போதும், கிரையத்திற்கு பின்னிட்டும் 2 கோடி ரூபாய் வாதி கோகுல் பெற்றதற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை. 1ம் பிரதிவாதி வாதி கோகுலிடமிருந்து கிரையம் பெற்ற போது அசல் ஆவணங்களை வைத்திருந்தாரா என்றால் இல்லை. வாதியிடமிருந்து 1ம் பிரதிவாதி மொத்தம் 3 கிரைய ஆவணங்கள் எழுதி வாங்கினார். வாதி கோகுல் 3 கிரைய ஆவணங்களிலும் கையொப்பம் செய்த போது சாட்சியாக கையொப்பம் செய்தவர்கள் இல்லை. வாதியை 1ம் பிரதிவாதி கிரையம் முடிந்த பிறகு அவரை தனியாக விட்டுவிட்டால் பிரச்சனை ஏற்படும் என்பதற்காக 1ம் பிரதிவாதி வாதியை தன் வீட்டிற்கு அழைத்துச்சென்றார் என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி வாதியை கிரையம் முடித்து ஒரு வாரகாலம் வரை வாதியை மதுபோதையில் 1ம் பிரதிவாதியின் கட்டுப்பாட்டில் தான் வைத்திருந்தார் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன முதல்விசாரணையில் கூறிய பணம் ரூபாய் 1 லட்சத்தை ரொக்கமாக 1ம் பிரதிவாதி எனக்கு கொடுத்தார். 1ம் பிரதிவாதி இது தவிர வேறு எதாவது பண உதவி செய்வதாக கூறினாரா என்றால் இடத்தினை விற்ற பிறகு மீதி பணம் தருவதாக 1ம் பிரதிவாதி சொன்னார். வாதியை உங்கள் கட்டுப்பாட்டிலிருந்து கூட்டிச்சென்றது வாதியின் உறவினர்களா அல்லது நண்பர்களா என்றால் வாதியின் உறவினர்கள் கூட்டிச்சென்றார்கள். வாதி அவரே விருப்பப்பட்டு உங்களுடன் வரவில்லை என்றும் 1ம் பிரதிவாதி தூண்டுதலின் பேரில் காவல்துறையினர் கட்டாயப்படுத்தி 1ம் பிரதிவாதி மற்றும் அவரது ஆட்களுடன் அனுப்பி வைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கில் உங்களயையும், 1ம் பிரதிவாதி மற்ற எதிரிகளையும் பிணையில் விட நிபந்தனையுடன் அசல் ஆவணங்களை ஒப்படைக்கவேண்டும் என்று

பிணையில் விட்டுள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி மேற்படி வழக்கு கிரைய ஆவணங்களை பதிவு செய்ய உதவிய வகையில் பாக்கி தொகையாக கொடுப்பதற்காக உங்களுடைய வங்கியின் கணக்கு எண்ணை கடந்த மாதம் கேட்டார் என்று சொன்னால் சரிதான் நான் வங்கி கணக்கு எண்ணை கொடுக்கவில்லை ஆகையால் 1ம் பிரதிவாதி என் மாமனாரின் வங்கி கணக்கில் செலுத்தியுள்ளார். என் மாமனாரின் வங்கிக்கணக்கில் ரூபாய் 10 லட்சம் 1ம் பிரதிவாதி செலுத்தியுள்ளார். என் மாமனாரிடம் 1ம் பிரதிவாதி கொடுத்த 10 லட்ச ரூபாய் பணத்தை நான் பெற்றுக்கொண்டு அதை 1ம் பிரதிவாதியிடம் திருப்பி செலுத்திவிட்டேன்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

மாலை 5.10 மணி ஆனதால் 1ம் பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கைபெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.25 17:55:51 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.